ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீலோககுரவே நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## விளாஞ்சோலைப்பிள்ளை - வருஷ திருநச்சத்திரம் - ஐப்பசி - உத்திரட்டாதி

### தனியன்

துலாSஹிர்புத்ந்யஸம்பூதம் ஸ்ரீலோகார்ய பதாஸ்ரிதம் /
ஸ்ப்தகாதாப்ரவக்தாரம் நாராயணமஹம் பஜே //

ஸ்ரீலோகார்ய பதாரவிந்த மகிலம் ஸ்ருத்யர்த்த கோஸாம்ஸ்ததா
கோஷ்டீஞ்சாபி ததேகலீநமநஸா ஸஞ்சிந்த்யந்தம் முதா /
ஸ்ரீநாராயண தாஸமார்யமமலம் ஸேவே ஸதாம் ஸேவிதம்
ஸ்ரீவாக்பூஷண கூடபாவவிவ்ருதிம் யஸ்ஸப்தகாதாம் வ்யதாத் //

ஆசார்யர் - பிள்ளைலோகாசாரியர்
ஈடு ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களும் தத்வத்ராயாதி ரஹஸ்யங்களும்
ஸாதித்தருளினவர் - அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்
இவர் அருளிய ப்ரபந்தம் - - ஸப்தகாதை
குலம் - ஈழவர்
திருவவதாரஸ்தலம் - திருவனந்தபுரத்தை ஒட்டிய ஆறனூர் கிராமம். இது கரை மனை ஆற்றின் கரையில் உள்ளது.

இவர் விளா மரங்கள் சூழ்ந்த சோலையில் வாழ்ந்து வந்ததால், இவருக்கு விளாஞ்சோலைப் பிள்ளை என்ற பெயர் ஏற்பட்டது. இவர் ஈழவர் குலத்தினர் ஆதலால், இவரால் அனந்த பத்மனாபனை கோவிலுக்குள் சென்று ஸேவிக்க முடியவில்லை. அதனால் தினமும் தம்முடைய சோலையில் ஒரு தென்னை மரத்தின் மீது ஏறி அங்கிருந்து அனந்த பத்மனாபனின் விமானத்தை தரிசனம் செய்வாராம்.

இவர் திருவரங்கம் சென்று பிள்ளைலோகாசாரியர் திருவடிகளை ஆசிரியித்தார். இவருக்கு லோகாசாரியர் நலம் திகழ் நாராயண தாஸர் என்று திருநாமத்தை சூட்டினார். இவருடைய குலப்பிறப்பு ஸ்ரீவைஷ்ணவ நெறியை ஏற்கததடையாக இல்லை. பிள்ளைலோகாசாரியர் காலசேஷப கோஷ்டியில் இவருக்கு ஓர் இடம் கிடைத்தது. பிள்ளை லோகாசாரியர் சாதித்த ஸ்ரீவசனபூஷணத்துக்கு அதிகாரி இவர் உருவரேயாவார். இந்த அர்த்த விசேஷங்களை லோகாசாரியர் திருவாய்மொழி பிள்ளைக்கு பிற்காலத்தில் உபதேசிக்குமாறு விளாஞ்சோலைப்பிள்ளையிடம் பணித்தார். இவர்

திருவாய்மொழி பிள்ளையின் வருகைக்காக நீண்டகாலமாக திருவனந்தபுரத்தில் வாசமே கமழும் சோலையில் யோகத்தில் காத்திருந்தார்.

ஸப்தகாதை (ஸ்ரீவசனபூஷணத்தின் தாத்பர்யத்தைக் காட்டுகிறது)

## தனியன்

வாழிநலந்திகழு நாரண தாதனருள்
வாழி அவனமுத வாய்மொழிகள் - வாழியே
ஏறு திருவுடையா னெந்தை யுலகாரியன் சொல்
தேறு திருவுடையான் சீர்.

## நூல்

அப்பொ னரங்கர்க்கு மாவிக்கும் அந்தரங்க
சம்பந்தங் காட்டித் தடைகாட்டி - உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறி காட்டும்
அவனன்றோ வாசாரியன். 1

அஞ்சு பொருளு மளித்தவன் பா லன்பிலார்
நஞ்சில் மிகக்கொடியர் நாம் சொன்னோம். - நஞ்சுதான்
ஊனை முடிக்கும் துயிரை முடிக்குமென்று
ஈனமிலார் சொன்னா ரிவை. 2

பார்த்த குருவினளவில் பரிவின்றி
சீர்த்தமிகு ஞான மெல்லாம் சேர்ந்தாலும் - கார்த்தகடல்
மண்ணின் மேல் துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழா நரகு. 3

தன்னை யிறையைத் தடையைச் சரணெறியை
மன்னுபெருவாழ்வை யொரு மந்திரத்தி - னின்னருளால்
அஞ்சிலுங்கேடோட வளித்தவன்பா லன்பிலார்
நஞ்சிலுங் கேடென்றிருப்பன் நான். 4

என்பக்க லோதினா ரின்னா ரெனுமியல்வும்
என்பக்கல் நன்மையெனு மியல்வும் - மன்பக்கல்
சேவிப்பார்க் கன்புனடயோர் சன்ம நிரூபணமும்
ஆவிக்கு நேரே யழுக்கு. 5

அழுக்கென் றிவையறிந்தே னம்பொ னரங்கா !
ஒழித்தருளா யுள்ளில் வினையை - பழிப்பிலா
வென்னா ரியர்க்காக வெம்பெருமா னார்க்காக
உன் னாரருட்காகவுற்று. 6

தீங்கேது மில்லாத் தேசிகன்தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர் - ஓங்காரத்
தேரின்மே லேறிச் செங்கதிரினூடுபோய்ச்
சேருவரே யந்தாமந் தான். 7

## விளாஞ்சோலைப்பிள்ளையும் திருவாய்மொழிப்பிள்ளையும்

திருவாய்மொழி பிள்ளை லோகாசாரியரின் நியமனப்படியும் கூரகுலோத்தம தாசரின் அறிவுரைப்படியும் ஸ்ரீவசனபூசஷணத்தின் அர்த்த விசேஷங்களை கேட்க திருவனந்தபுரத்திற்கு எழுந்தருளினார். ஆங்கே இவர் கண்ட காட்சி இவரை வியக்கச் செய்தது. விளாஞ்சோலை பிள்ளை தம்முடைய ஆசார்யரான பிள்ளை லோகாசாரியரையும், அவருடைய திருமேனியையும், அவருடைய திருவோலகத்தில் இடம் பெற்ற சிஷ்யர்களையும் தியானித்துக் கொண்டு, தம்முடைய திருமேனியில் சிலந்தி நூலிழைக்கும்படி, பல காலம் யோக ஸமாதியில் திருவாய்மொழி பிள்ளையின் வருகைக்காக காத்துக்கொண்டு ஆழ்ந்திருந்தார். திருவாய்மொழிப்பிள்ளை இவரை வந்து எதிரே தொழுததும், கண்களைத்திறந்து குளிரக் கடாசஷித்தார். இவரைக் கண்டவுடன் முகமலர்ச்சி அடைந்தார்.

திருவாய்மொழிப் பிள்ளைக்கு ஸ்ரீவசனபூசஷணத்தின் அர்த்த விசேஷங்களை விளக்கியதோடு நில்லாது ஸ்ரீவசனபூஷணத்தின் தாத்பர்யத்தைக் காட்டும் ஏழு வெண்பாக்களான ஸப்தகாதையையும் இயற்றி அதையும் உபதேசித்தார். வேதகப்பொன்னான விளஞ்சோலைப்பிள்ளையின் ஸம்பந்தத்தாலே ஜன்மக் கொத்தையைக் கழித்துக்கொண்டார் இவர்.

தொழுமினீர் கொடுமின் கொண்மின் (திருமாலை 42ஆம் பாசுரம்) என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அறிவுறுத்தியது அங்கே நடைமுறை பெற்றது. கொடுத்தவர் பஞ்சமரான விளஞ்சோலைப்பிள்ளை. கொண்டவர் அந்தணர் குலத்தவரான திருவாய்மொழிப்பிள்ளை. ஞான பரிமாற்றத்துக்கு வர்ணம் தடையில்லை. ஜன்மத்துக்குக் குற்றம் யாவது எனில் குடிபிறப்பு, கல்விச்சிறப்பு, செல்வச்செருக்குகளால் (மூக்குறும்பு) ஏற்படும் அஹங்கார மமகாரங்கள். இவை மூன்றும் ப்ராஹ்மண ஜாதியில் பிறந்தவர்களுக்கு வரும் இடர்கள். இவை சிறிதும் இல்லாதவர்கள் தம்மைத் தாழ்ந்தவராக நினைத்துக் கொள்ளும் உயர் பிறப்பினர். இவர்களை அபக்ருஷ்டமாக ப்ரமித்த உத்க்ருஷ் ஜன்மாக்கள் என்பர் அழகியமணவாளப் பெருமாள் நாயனார்.

நம் பூர்வாசாரியர்களில் மேலே குறிப்பட்டவற்றை தம் வாழ்நாளில் முதலில் கடை பிடித்துக்காட்டிய பெறுமை நம் கூரத்தாழ்வான் ஒருவரையே சாரும். (மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின் - இராமாநுச நூற்றந்தாதி - 7ஆம் பாசுரம்). திருவாய்மொழிப் பிள்ளை ஸ்ரீவசனபூஷணத்தின் அர்த்தங்களை நெஞ்சிலே தேக்கிக் கொண்டு விளாஞ்சோலைப் பிள்ளையிடம் விடைப் பெற்றுக் கொண்டு ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினார்.

**பெரியபெருமாள் திருவடியில் திருப்பாணாழ்வார் சேர்ந்தது போல் திருவனந்தபுரத்தில் அனந்தபத்பநாபரின் திருவடியில் விளஞ்சோலை பிள்ளை சேர்ந்தார்**

விளாஞ்சோலைப் பிள்ளை தம் ஆசாரியர் பிள்ளை லோகாசாரியர் ஜ்யோதிஷ்குடியில் ஆனையிட்டப்படி திருமலையாழ்வாருக்கு (திருவாய்மொழி பிள்ளைக்கு) ஸ்ரீவசனபூஷணத்தை ஒப்படைத்தபின், செய்ய வேண்டிய கடமையைச் செய்த மனநிறைவோடு அவாவற்று வீடுபெற்றார்.

அதே சமயம் திருவனந்தபுரம் அனந்தபத்மனாபன் ஸந்நிதியில் ஓர் அதிசய ஸம்பவம் நிகழ்ந்தது.

அனந்தபத்மநாபனுக்கு நம்பூதிரிமார்கள் திருவாராதனம் செய்து கொண்டிருக்க, விளாஞ்சோலைப் பிள்ளை கிழக்கே கோபுரவாசல் வழியாக உள்ளே நுழைந்தார். த்வஜஸ்தம்ப மண்டபம் கடந்து உள்ளே சென்றார். நரசிம்ம மூர்த்தியை வலமாக வந்து கர்ப்பக்ருஹத்தின் வடக்கு வாசல்வழியாக மூன்றாவது வாசலாகிய திருவடியருகே நின்றார். விஷ்வக் சேனாதிகளான நித்யர்கள் திருமுடிப்பக்கம் சேருவார்கள். பிரம்மாதிகள் நாபிகமலம் தோன்றும் பக்கத்தில் சேருவார்கள். அடியார்கள் திருவடியை நாடுவார்கள். இதை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசார்ய ஹ்ருதயம் - மூன்றாம் ப்ரகரணம் 183 சூர்ணிகை விளக்குகிறது - ஸஸைந்ய புத்ரஸிஷ்ய ஸாத்ய ஸித்த பூஸுராார்ச்சநத்துக்கு முகநாபி பாதங்களை த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்தஸயநத்திலே வ்யக்தம். அச்சமயம் பூஜகர்களான நம்பூதிரிமார்கள் மலையாள தேசாசாரத்தின்படி புலையரான விளாஞ்சோலைப்பிள்ளை உள்ளே நுழைந்ததால் நாங்கள் நிற்கப் போவதில்லை என்று சொல்லி திருக்காப்பு சேர்த்துவிட்டு ஸந்நிதியை மூடிவிட்டு வெளியே கோபுர வாசலுக்கு வந்தனர்.

அவ்வளவில் விளாஞ்சோலைப் பிள்ளை திருவடிகளில் ஆசிரயித்த சீடர்கள் விளாஞ்சோலைப் பிள்ளை லோகாசார்யர் திருவடிகளைச் சேர்ந்து விட்டார் என்று அறிவித்து அவருடைய சரம திருமேனிக்காப் பெருமாளுடைய திருப்பரியட்டம் திருமாலைவேண்டி கோயில் வாயிலில் இராமாச நூற்றந்தாதி இயல் சேவித்துக் கொண்டு நின்றனர். அதைக் கண்ணுற்ற நம்பூதரிமார்கள், ப்ரத்யசஷமாக தாங்கள் கண்ட ஆச்சர்யத்தை அங்கு இருந்த அணைவருக்கும் வெளிப்படுத்தினர். திருவரங்கம் பெரிய கோவிலில் ஸ்ரீஆண்டாள், திருப்பாணாழ்வார் பெரியபெருமாள் திருவடிகளிலே அந்தர்பவித்தது போலே, திருவனந்தபுரத்திலும் அனந்தசாயியின் திருவடியில் விளாஞ்சோலைப் பிள்ளை அந்தர்பவித்தார். நலம் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே (பெருமாள் திருமொழி 10ஆம் திருமொழி 11ஆம் பாசுரம்) என்ற குலசேகராழ்வார் திருவாக்கு நிறைவேறியது.

**விளாஞ்சோலைப் பிள்ளைக்கு திருவாய்மொழிப் பிள்ளை சரம கைங்கர்யம் செய்தல்.**

விளாஞ்சோலைப் பிள்ளை ஆசார்யன் திருவடியடைந்ததைக் கேள்வியுற்ற திருவாய்மொழிப் பிள்ளை, அவருக்கு சிஷ்யபுத்ரர்கள் செய்யும் சரம கைங்கர்யங்களை பெருக்கத் திருவத்யயனத்தோடு நிறை வேற்றினார். பெரிய நம்பி மாறனேரி நம்பி விஷயத்தில் செய்த புத்ரக்ருத்யம் இங்கே நினைவிற்கு வருகிறது அன்றோ.

மேலே சொன்ன விஷயங்கள் அடியேனுடைய ஆத்ம நண்பர் மதுரை பேராசிரியர் முனைவர் ஸ்ரீ.உ.வே இரா.அரங்கராஜன் ஸ்வாமி அருளியுள்ள மன்னுபுகழ் மணவாளமாமுனிவன் என்கிற நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: